பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 16 | திங்கட்கிழமை | 29.04.2024 | அதிர்வு 272

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த

## பல கோடி ரூபா மதிப்பிலான போதைப்பொருட்கள் சிக்கின

இந்தியக் கடலோரக் காவல்படையினர், மேற்கொண்ட உளவுத்துறை அடிப்படையிலான போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையின்போது, "அல் – ராசா" என்ற பாகிஸ்தான் படகில் இருந்து 06

# வேட்பாளர் பட்டியல் வெளிவந்த பின்னரே யாரை ஆதரிப்பது என்று முடிவு எடுப்போம்

## இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

"ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் வெளிவந்த பின்னரே யாரை ஆதரிப்பது என்று இலங்கைத் தொழிலாளார் காங்கிரஸ் கட்சி முடிவு எடுக்கும்."

– இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளார் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார் மட்டக்களப்பில் ஆளுநர் இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் எல்லோரும் வாழக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

இவரை நம்பி பின்னால் 06




# அரசின் ஜனாதிபதி வேட்பாளர் யார்? தேர்தல் அறிவிக்கும் வரை மௌனம்

## ரணில் - மஹிந்த கூட்டாகத் தீர்மானம்



ஜனாதிபதித் தேர்தலை தேர்தல்கள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை ஆளும் தரப்பின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை வெளிப்படுத்துவதில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டாக முடிவெடுத்துள்ளன. 06

# மோடியைப் போன்றவர் ரணில்! இருவருக்கும் வெற்றி நிச்சயம்!!

## இராஜாங்க அமைச்சர் டயானா புகழாரம்



"இந்தியாவில் நரேந்திர மோடி எப்படியோ அதுபோலவே இலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இவ்விருவருமே தேர்தல்களில் நிச்சயம் வெற்றி பெற்று ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்வார்கள்." 06




மூக்கிருக்கும் வரை சளி இருக்கும் என்பார்கள்.

அந்த மாதிரித்தான் நாடாளுமன்றக் கலைப்பு விவகாரமும்.

தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின் படி ஒரு நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தில் முதல் இரண்டரை ஆண்டுகள் கழிந்த பின்னர், எஞ்சிய இரண்டரை ஆண்டுக்குள் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி எந்த நேரத்திலும் கலைக்க முடியும்.

தற்போதைய நாடாளுமன்றத்தின் முதல் இரண்டரை ஆண்டுகள் பதவிக்காலம் முடிந்துவிட்டது. அடுத்த ஆண்டு ஓகஸ்ட் வரை அதன் பதவிக்காலம் எஞ்சியிருக்கின்றது.

இந்த இடைவெளியில் எப்போது 06




# சிவராம், ரஜிவர்மன் நினைவேந்தல்கள்

# நேற்று வடமராட்சி ஊடக இல்லத்தில்

படுகொலை சொய்யப்பட்ட ஊடக வியலாளர்களான மாமனிதர் தராகி சிவராமின் 19 ஆம் ஆண்டு மற்றும் செல்வராசா ரஜிவர்மனின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் நேற்று உணர்வுபூர்வமாக இடம் பெற்றது.

வடமராட்சி ஊடக இல்லத்தில் அதன் உறுப்பினர் முருகப்பெருமான் மதிவாணன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் பொது சுடரை படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் செல்வராசா ரஜிவர்மனின் தாயார் ஏற்றி வைக்க, தராகி சிவராம் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையை யாழ் பல்கலைக்கழக பீடாதிபதி ரகுராம் அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ரஜிவர்மன் திருவுருவ படத்திற்கு மலர் மாலையை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அணிவித்தார்.

சம நேரத்தில் ஏனைய ஊடக வியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் திருவுருவப்படங்களிற்கு மெழுகு வர்த்தி ஏத்தியும், மலர்தூபியும் அக வணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், முன்னாாள் வடமாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன், ஊடக வியலாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஊடகவியலாளர் மாமனிதர் தராகி சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு, பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைத்து இனம் தெரியாதவர்களால் வெள்ளை வானில் கடத்தப்பட்ட பின்னர் சுட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் இலங்கை நாடாளுமன்றத்துக்கு அருகில் சடலம் மீட்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராகக் கடமையாற்றி வந்த வேளை கடந்த 2007 ஆன் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29ம் திகதி காலை 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்களால் சுட்டுப்படு கொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.












# ‘கித்சிறி மேலா’ புத்தாண்டு நிகழ்வின் பரிசளிப்பு விழாவில் ஜனாதிபதி பங்கேற்பு

ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் கித்சிறி ராஜபக்ஷ, மருதானை – சுதுவெல்ல விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நேற்று முன்தினம் நடத்திய புத்தாண்டு நிகழ்வுகள் டீன்ஸ் வீதி சுற்றுவட்டாரத்தில் நடைபெற்றன.

இதன் போதான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றது. முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட புத்தாண்டு அழகிகளுக்கு ஜனாதிபதியினால் மகுடம் அணிவிக்கப்பட்டது.

அகில இலங்கை உடல் கட்டழகு போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும் சைக்கிளோட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் ஜனாதிபதி பரிசுகளை வழங்கினார்.

கித்சிறி ராஜபக்ஷவினால் இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

சுதுவெல்ல முஸ்லிம் நலன்புரிச் சங்கம் மற்றும் அல் மதரசதுல் ஜலாலியா சங்கத்தின் உறுப்பினர்களால் கித்சிறி ராஜபக்ஷவிற்காகத் தயார்படுத்தப்பட்டிருந்த பரிசும் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளில், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, ஜனாதிபதி தொழிற் சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.















# ஓட்டப் பந்தயத் திடல் விபத்து; காணொலி ஊடாக விசாரணை



தியத்தலாவை ஓட்டப் பந்தயத்திடலில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் அங்கு பதிவான காணொலிகள் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என இராணுவம் தெரிவித்துள்ளது.

மேஜர் ஜெனரல் ஒருவரின் தலைமையிலான 7 பேர் கொண்ட குழுவினால் விசாரணை நடத்தப்படுவதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிக்கை எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதி இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி தியத்தலாவயில் இடம்பெற்ற கார் பந்தயத்தின் போது இடம்பெற்ற விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 21 ஆயிரம் பேருக்கு டெங்குத் தொற்று

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 21 ஆயிரத்து 55 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 4 ஆயிரத்து 532 டெங்கு நோயாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 1,936 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

நிலவும் மழையுடனான காலநிலையினால் டெங்கு நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் சாத்தியம் நிலவுவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

# நாட்டின் இறக்குமதிச் செலவும் ஏற்றுமதி வருமானமும் அதிகரிப்பு



கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் மார்ச் மாதத்தில் இறக்குமதிச் செலவு மற்றும் ஏற்றுமதி வருமானம் என்பன அதிகரித்துள்ளன என இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடுகையில் இறக்குமதிச் செலவில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதன் காரணமாகப் வர்த்தக பற்றாக்குறை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இறக்குமதிச் செலவினம் 2 ஆயிரத்து 890 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

# சொல்ஹெய்ம் நாளை யாழ் வருகை



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் அமைந்துள்ள ரப்றோபானா சீ பூட் நிறுவனத்திற்கு நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் எரிக் சொல்கெய்ம் உள்ளிட்ட நோர்வே குழுவினர் வருகை தருகின்றனர்.

நியூசிலாந்தைச் சேர்ந்த ஒருவரின் முதலீட்டில் இயங்கும் இந்த நிறுவனத்தின் பணிகளை ஆராய்தல் மற்றும் எதிர்காலத் திட்டமிடல் போன்ற நடவடிக்கைகளுக்காகவே நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இந்தக் குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தருகின்றனர்.

இக்குழுவில் நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் சுற்றுச் சூழல் விவகார ஆலோசகருமான எரிக் சொல்ஹெய்முடன் நோர்வேயின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட குழுவினர் இவ்வாறு வருகை தருகின்றனர்.

# இறப்பு எண்ணிக்கை உயர்வு! பிறப்பு எண்ணிக்கை வீழ்ச்சி!!

பொருளாதார நெருக்கடி காரணமாக உரிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியாமல், பல்வேறு நோய் நிலைமைகளுக்கு ஆளாகி மனநல பிரச்சினைகள் அதிகரிப்பது போன்ற காரணங்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவுகள் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் சட்டத்தரணி லக்சிக்கா கணேபொல இதனைத் தெரிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டில், நாட்டில் ஆண்டு சராசரி இறப்பு எண்ணிக்கை ஒரு இலட்சத்து 40 ஆயிரமாகக் காணப்பட்டது. அந்த எண்ணிக்கை தற்போது ஒரு இலட்சத்து 80 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை காரணமாக பிறப்பு எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவுகள் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

2020ஆம் ஆண்டளவில், நாட்டில் ஆண்டு பிறப்பு எண்ணிக்கை சுமார் 3 இலட்சத்து 25 ஆயிரமாகக் காணப்பட்டது. இந்தநிலையில், அந்தத் தொகை தற்போது 2 இலட்சத்து 80 ஆயிரம் வரை வீழ்ச்சிடைந்துள்ளது.

இதேவேளை, பொருளாதார நெருக்கடி மற்றும் சமூகப் பிரச்சினைகள் காரணமாக இளைஞர், யுவதிகள் விவாகரத்து செய்து கொள்ளும் நிலைமை அதிகரித்து வருகின்றது என்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவுகள் பிரிவின் சிரேஷ்ட பிரதி பதிவாளர் நாயகம் சட்டத்தரணி லக்சிக்கா கணேபொல மேலும் தெரிவித்துள்ளார்.

# நிதி அமைச்சு செயலருக்கு ஒரு வருடம் சேவை நீடிப்பு



நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஒரு வருட சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநராக கடமையாற்றிய மஹிந்த சிறிவர்தன, கடந்த வெள்ளிக்கிழமை அந்தப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

சர்வதேச நாணய நிதிய பேச்சுவார்த்தைகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் மஹிந்த சிறிவர்தனவின் பங்களிப்பை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மத்திய மலைநாடு பகுதியில் இரவில் கடும் பனிமூட்டம்!

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் தொடர்ந்து மிகவும் வறண்ட காலநிலை மற்றும் இரவில் கடும் பனிமூட்டம் காணப்படுகிறது.

இரவு நேரங்களில் கடும் பனிமூட்டம் காணப்படுவதால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பனிமூட்டம் காணப்படுவதால் எதிர்திசையில் செல்லும் வாகனங்களை பார்க்க முடியாத நிலை உள்ளது. அவ்வீதிகளில் வாகனங்களை செலுத்தும் போது அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேல், சப்ரகமுவ, மத்திய, தெற்கு, வடமேற்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அம்பாறை மாவட்டத்திலும் இன்று பிற்பகல் 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, மேல், சப்ரகமுவ, தெற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும், ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை நிலவும் என திணைக்களம் மேலும் குறிப்பிடுகிறது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
வேண்டுமானாலும் ஜனாதிபதி தமது விருப்புக்கேற்ப நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும்.

அந்த நிலைமையை வைத்துக் கொண்டுதான், இதை ஒட்டிய பதிவுகள், 'இந்தா நாடாளுமன்றக் கலைப்பு', 'அந்தா பொதுத் தேர்தல் அறிவிப்பு!' என்று செய்திகள் வெளி வருகின்றன.

கடந்த மாதம் வரை அடிபட்ட அத்தைய கதைகள், பின்னர் சற்று அடங்கிப் போயிருந்தன. மீண்டும் அவை இப்போது இறகு கட்டிப் பறக்கத் தொடங்கிவிட்டன.

இன்றைய திகதியைக் குறிப்பிட்டு இந்தத் திகதியில் நாடாளுமன்றம் கலைப்பு என்றும் ஒரு செய்தி வெளியாகியது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை வைக்க வேண்டுமென மொட்டுக் கட்சியின் மூத்த தலைவர் பஸில் ராஜபக்ஷ விரும்புகிறார். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கு உடன்படுகிறார் இல்லை.

இந்தப் பின்புலத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று செய்தி – அல்லது வதந்தீ – சற்று அடங்கிப் போயிருந்தது.

இப்போது அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் மொட்டுக் கட்சியின் பிரமுகர் பஸில் ராஜபக்ஷவும் மீண்டும் அடிக்கடி சந்திக்கத் தொடங்கியுள்ளனர். அதை அடுத்து நாடாளுமன்றக் கலைப்பு என்ற வதந்தி மீண்டும் மெல்லப் பரவத் தொடங்கிவிட்டது.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என சமூக வலைத்தளங்கள் ஊடாக வெளியாகும் செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என அரசாங்க உயர் வட்டாரங்கள் கூறியுள்ளன

"வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கும் சஜித்துடன் களத்தில் மோதவே ஜனாதிபதி விக்கிரமசிங்க விரும்புகிறார். மாறாக சஜித்துக்கு பதவி உயர்வு வழங்கி, அவரைப் பிரதமராக்கி, பிரதமர் சஜித் எதிர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ற களமாக ஜனாதிபதித் தேர்தலை மாற்றுவதை அவர் விரும்பவில்லை. அதன் காரணமாகவே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த அவர் விரும்பவில்லை" – என்று அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

சரியான – நிலைமை புரிந்து கொண்ட – விளக்கம்தான் இது...!

## மோடியைப் போன்றவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
– இவ்வாறு இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"சவாலான சூழ்நிலையிலேயே இந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார். அவர் இதற்கு முன்னர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தால் இந்த நாடு சிறந்த நிலையில் இருந்திருக்கும். அதனை அவர் தனது செயல் மூலம் நிரூபித்துள்ளார்.

இந்தியாவில் 2ஆம் கட்ட வாக்குப் பதிவு இடம்பெற்று வருகின்றது. அந்தத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி நிச்சயம் வெற்றி பெறுவார். அவர் மீண்டும் பிரதமர் ஆவார். அவர் இந்தியாவை நேசிக்கின்றார். இந்தியாவில் நரேந்திர மோடி போல்தான் இலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார். அவர் நிச்சயம் ஜனாதிபதியாக வேண்டும்." – என்றார்.

# வடக்கில் கடந்த வருடம் 763 பேர் அரச சேவையிலிருந்து விலகல்!

### 5 ஆண்டுகால விடுமுறை பெற்றவர்கள் உள்ளடங்கலாக



வடக்குமாகாணத்தில்கடந்தஆண்டில் மாத்திரம் 763 அரச பணியாளர்கள் தங்கள் சேவையிலிருந்து விலகியுள்ளனர். இவர்களில் 5 ஆண்டுகால விடுமுறையைப் பெற்று மாத்திரம் 720 பேர் விலகியுள்ளனர். அத்துடன் 36 பேர் எந்தவொரு அறிவித்தலும், இல்லாமலும் 7 பேர் உரிய அறிவித்தலுடனும் சேவைகளிலிருந்து விலகியுள்ளனர்.

வடக்கிலுள்ள 5 மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதம செயலர் அலுவலகம் ஆகியவற்றுக்குச் சமர்பிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைக்கான பதில்களிலிருந்து இவை தெரியவந்துள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒருவர் உத்தியோகபூர்வமாக பதவி விலகியதுடன் 21பேர் உத்தியோகபற்றற்ற முறையில் பதவி விலகியுள்ளனர். மேலும் 5 ஆண்டுகால விடுமுறைக்கு 99 பேர் விண்ணப்பித்துள்ள நிலையில் 79 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவர் உத்தியோகபூர்வமாக விலகியுள்ளதுடன் 7 பேர் உத்தியோகபற்றற்ற முறையில் விலகியுள்ளனர். 5 ஆண்டு கால விடுமுறைக்கு 41 பேர் விண்ணப்பித்த நிலையில் 14 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 ஆண்டு கால விடுமுறைக்கு 28 பேர் விண்ணப்பித்த நிலையில் அவர்களில் 22 பேருக்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 2 பேர் உத்தியோகபூர்வமாக பதவி விலகியுள்ளனர். 5 ஆண்டுகால விடுமுறைக்கு விண்ணப்பித்த 16 பேருக்கும் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் 3 பேர் உத்தியோகபூர்வமாக விலகியுள்ளதுடன் 8 பேர் உத்தியோகப்பற்றற்ற முறையில் விலகியுள்ளனர். 17 பேர் 5 ஆண்டுகால விடுமுறைக்கு விண்ணப்பித்த நிலையில் அவர்களில் 13 பேருக்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

வடக்கு மாகாண சபைக்குட்பட்ட திணைக்களங்களிலிருந்து 5 ஆண்டு கால விடுமுறைக்கு 625 பேர் விண்ணப்பித்த நிலையில் 576 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## வேட்பாளர் பட்டியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
போனால் எதிர்வரும் 5 வருடங்களில் நாடு அதிக வளர்ச்சியடையும் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும்.

அதைவிடுத்து மாற்று முடிவு எடுக்கும் போது மக்கள் மீண்டும் பொருளாதார வீழ்ச்சிக்குள் தள்ளப்படும் வாய்ப்பு ஏற்படும் என்ற பெரிய அச்சம் இருக்கின்றது.

மலையக மக்கள் தங்கள் பெறுமதியான வாக்குகளை வீணடிக்கக்கூடாது. ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு வெற்றி வாய்ப்பு இருக்கின்றதோ அந்த வேட்பாளருக்கு வாக்களித்து எங்களது உரிமைகளைத் தக்கவைக்க வேண்டும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினராகிய நாம், ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் வெளிவந்த பின்னரே யாரை ஆதரிக்கின்றோம் என்ற முடிவை அறிவிப்போம்." – என்றார்.

## அரசின் ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நேரில் சந்தித்து இந்த முடிவை எடுத்துள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

"ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று தற்போதே கருத்துக் கூறுவதால் அரசு மேற்கொண்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வரும் வரைக்கும் அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அனைத்து அரச எம்.பிக்களும் கூட்டாக ஆதரவு வழங்க வேண்டும். அதுவரை ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய பேச்சை எவரும் எடுக்கக்கூடாது. ஆளும் தரப்பு எம்.பிக்கள் தற்போது அபிவிருத்திப் பணிகளில் மாத்திரமே கவனம் செலுத்த வேண்டும்." – என்றும் ரணிலும், மஹிந்தவும் நடத்திய சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## பல கோடி ரூபா மதிப்பி...

(முதலாம் பக்கத் ெ
600 கோடி ரூபா (இந்திய ரூபா) மதிப்பிலான போதைப்பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்திய ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இதன்போது, அந்தப் படகில் இருந்து பாகிஸ்தானைச் சேர்ந்த 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

கைதான சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக குஜராத்தின் போர்பந்தருக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று இந்தியக் கடலோரக் காவல்படை தெரிவித்துள்ளது.

குறித்த போதைப்பொருட்கள் இலங்கைக்கு எடுத்துச் செல்லப்படவிருந்தன என்று கைது செய்யப்பட்ட பாகிஸ்தானியர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், எங்கே? யாரால்? இந்தப் பொருட்கள் கையேற்கப்படவிருந்தன என்ற தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.




# படுகொலையுண்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி மட்டக்களப்பு நகரில் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

## சிவராமை நினவேந்திய பின்னர் முன்னெடுக்கப்பட்டது

**(பழுவூரான்)**

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் டி.சிவராமின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி கோரிய போராட்டமும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபியில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு.ஊடக அமையம் மற்றும் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் என்பன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவம் பாக்கியநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் திருவுருவப் படத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவம் பாக்கியநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான பா.அரியநேத்திரன் ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர்.

அத்தோடு நிகழ்வில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் அவரின் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தியமையோடு, நினைவுச் சுடர்களையும் ஏற்றினர்.

அதனைத் தொடர்ந்து நினைவுத் தூபிக்கு முன்பாக இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும், ஊடக சுதந்திரத்தினை வலியுறுத்தியும் கவனஈர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இரா.துரைரத்தினம், இந்திரகுமார் பிரசன்னா, முன்னாள் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள், வணபிதா ஜெகதாஸ், ஈரோஸ் ஜனநாயக முன்னணி உறுப்பினர்கள், இலங்கை தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றிய ஏற்பாட்டாளர் பெஃடி கமகே, மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாடு நிமிர முடியாது

வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் - வீழ்ச்சியில் - சிக்கிய இலங்கை நாடு அதன் நெருக்குவாரங்களில் இருந்து மீண்டெழும் சமிக்ஞைகள் தென்படுகின்றன.

நாடு சந்திக்கும் மிக மோசமான சவால் - பின்னடைவு - பாதிப்பு - இந்தப் பொருளாதார நெருக்குவாராம் என்றுதான் பலரும் எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

தந்திரோபாயமாக நடப்பதன் மூலமும் - செயற்படுவதன் வாயிலாகவும் - இந்தப் பொருளாதார பின்னடைவில் இருந்து மீளலாம் என்ற நம்பிக்கை இப்போது மக்கள் மத்தியில் பிறந்துள்ளது.

நாட்டு மக்கள் அதற்காக சில நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி இருக்கும். பொறுப்புகளை - பாடுகளை - சுமக்க வேண்டி இருக்கும். அழுத்தங்கள், சுமைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்கு இந்தச் சவால்களை சந்திக்க வேண்டும், துணிச்சலுடன் எதிர்கொண்டேயாக வேண்டும் என்பது யதார்த்த நிலைமை. அது மக்களுக்கு நன்கு தெரியும்; புரியும்.

அதனால்தான் பொருளாதாரச் செயற்பாடுகள் தொடர்பில் அரசு விதிக்கும் அதிக சுமைகளை மக்கள் தாங்களும் சேர்ந்து, இயைந்து சுமக்கின்றார்கள்.

இந்தப் பாடுகளை எதிர்கொள்வதன் மூலம் பொருளாதார நெருக்கடிச் சவாலை எதிர்கொண்டு தாங்கள் மீண்டெழ முடியும் என மக்கள் நம்பினாலும் கூட, அவர்கள் எதிர்கொள்ளும் இன்னொரு சவாலின் அழுத்தம் மக்களையும் நாட்டையும் கட்டுப்பாட்டையும் மீறிக் கிளர்ந்தெழுந்து முழு சமூகத்தையும் சீரழிக்கப் போகின்றது என்ற உண்மைதான் இப்போது மக்களை மலைக்க வைக்கும் சிக்கலாக இருக்கின்றது.

சமூகத்தில் பேயுருக் கொண்டிருக்கும் போதை வஸ்துப் பாவனை என்ற கொடூர அரக்கன்தான் கட்டுப்படுத்த முடியாத கட்டத்தை நோக்கி நகரும் பேராபத்து இப்போது நாட்டைச் சூழ்ந்து நிற்கின்றது.

போதை வஸ்துப் பாவானையாளர்கள், விற்பனையாளர்கள், கடத்தல் கும்பல்கள் மற்றும் பாதாள உலகக் குழுவினர் போன்ற தரப்புகளுக்கு எதிராக இலங்கைப் பொலிஸ் தரப்பு எடுத்த கூட்டிணைக்கப்பட்ட விசேட நடவடிக்கை நான்கு மாதங்களைக் கடந்தும் முழுமூச்சாகத் தொடர்கின்றது.

இந்த ரகத்துக்குள் அடங்கும் பல்லாயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் போதை வஸ்து வலை அமைப்பு முறியடிக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டு இருப்பதாக பொலிஸ் துறை கூறுகின்றது.

போதை வஸ்து வர்த்தகம் அடக்கப்பட்டு, நிலைமை முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் என மேற்படி 'யுக்திய' தொடர் நடவடிக்கைகளை ஒட்டி பொலிஸ் தரப்பு கூறுகிறது.

இலங்கையில் போதை வஸ்து பாவனை, கடத்தல், விற்பனைக் கட்டமைப்பு ஆகியன முழுமையாக அடக்கப்பட்டு, நிலைமை கட்டுப்பாடு - ஒழுங்குக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்று இலங்கை பொலிஸ் தரப்புக் கூறினாலும், அது நம்பக்கூடிய விடயமாக இல்லை என்பதுதான் கள நிலைமை.

இந்த மாத நடுப்பகுதியில் இலங்கைக்குத் தெற்கே சுமார் 133 கடல் மைல்கள் (246 கிலோ மீற்றர்) தொலைவில் சுமார் 350 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் உட்பட போதைப் பொருளுடன் ஒரு படகை இலங்கைக் கடற்படையினர் வளைத்துப் பிடித்தனர். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு என கடத்தி வரப்பட்ட போதைப் பொருள்களே இவை என்று கூறப்பட்டது.

இதேசமயம் பாகிஸ்தானின் பலுஸிஸ்தான் மாகாணத்தைச் சேர்ந்த 14 பேருடன், இந்திய பணத்தில் சுமார் 600 கோடி ரூபா (இலங்கை பணத்தில் சுமார் 2,500 கோடி ரூபா) பெறுமதியான 86 கிலோ போதை வஸ்து கடத்திவரப்பட்ட கப்பலை இந்தியக் கடலோரக் காவற்படை நேற்று மடக்கி இருக்கின்றது. இந்தப் போதைப் பொருள்களும் இலங்கைக்கு விநியோகிக்க என எடுத்துவரப்பட்டவை என இந்திய கடற்படை வட்டாரங்கள் கூறுகின்றன.

நாட்டுக்குள் போதை வஸ்து பாவனை - விற்பனை - கடத்தல் வலையமைப்பை தகர்த்து விட்டோம் என்று இலங்கை பொலிஸின் தலைமை சுயபிரலாபத்துடன் பெருமையாகக் கூறிக் கொண்டிருக்கும்போது, நாட்டுக்குள் பெருமளவு போதைப்பொருளை எடுத்து வருவதற்கான முழு எத்தனங்கள் நடந்திருக்கின்றன.

நாடு நிமிர போவதில்லை என்ற அபசகுனத்துக்கான தகவல்கள்தான் இவை.

# மணிப்பூரில் மீண்டும் வன்முறை: குழந்தைகள், பெண்கள் வெளியேற்றம்



இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூர் தலைநகரின் இம்பாலின் மேற்கு மாவட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இரண்டு குழுக்களின் கிராம தன்னார்வலர்களுக்கும் இடையே நேற்று துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரி கூறுகையில்,

"காங்போக்பி மாவட்டத்தில் இம்பால் பள்ளத்தாக்கின் மலைப்பகுதியில் உள்ள கவுட்ரூர் கிராமத்தில பல்வேறு ஆயுதம் தாங்கியவர்கள் கண்மூடித்தனமாக ஒருவருக்கொருவர் சுட்டுக்கொண்டனர். இதில் சில குண்டுகள் கிராமவாசிகளின் வீட்டுச் சுவர்களை துளைத்துள்ளன என கூறப்படுகிறது.

இதனால், குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் கிராமத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு அருகில் உள்ள பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்படுகின்றனர்.

இந்த மோதலில் கிராமத்தினரிடம் பீதியை ஏற்படுத்த உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 'பம்பி' எனப்படும் மோட்டார் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதற்குப் பதிலடியாக கவுட்ரூக் கிராமத்தின் தன்னார்வலர்கள் பதிலடி கொடுத்தால் துப்பாக்கிச் சண்டை நிகழந்துள்ளது. சூழ்நிலையைக் கட்டுக்குள் கொண்டு வர பாதுகாப்புப் படையினர் அங்கு விரைந்துள்ளனர்." – என்றார்.

கடந்த ஆண்டு மே 3 ஆம் திகதி மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் இரண்டு இனக்குழுக்களுக்குள் நிகழ்ந்து வரும் துப்பாக்கிச் சண்டைகளுக்கு கவுட்ரூக் கிராமமும் ஒரு சாட்சியாக இருந்து வருகிறது. அதிக துப்பாக்கிச் சண்டை நடக்கும் இடங்களில் ஒன்றாக இந்த கிராமம் அடையாளம் காணப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு மே மாதம், மணிப்பூர் மாநிலத்தில் மைத்தேயி மற்றும் குகி பழங்குடி இனமக்களுக்கு இடையே இனக்கலவரம் மூண்டது. இந்தக் கலவரத்தில் 200 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து இடம்மாற்றப்பட்டுள்ளனர். அதிலிருந்து மணிப்பூர் முழுவதுமாக மீளவில்லை என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்கும் வகையில் அவ்வப்போது மோதல்கள் நிகழ்கின்றன.

# 9 இடங்களில் 40 டிகிரி செல்சியஸ் க்கும் அதிகமாக பதிவான வெப்பநிலை பதிவு

அடுத்த 3 தினங்களில் வட தமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும். ஏனைய தமிழக மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும்போது ஓரிரு இடங்களில் அசவுகரியம் ஏற்படலாம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில் ஈரோடு, திருப்பத்தூர், சேலம், கரூர் பரமத்தி, தருமபுரி, திருத்தணி, வேலூர், திருச்சி மற்றும் நாமக்கல் ஆகிய 9 இடங்களில் 40 டிகிரி செல்சியஸ்'க்கும் அதிகமாக வெப்பநிலை பதிவாகியுள்ளது.

குமரிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். ஏப்ரல் 28 ஆம் திகதி முதல் மே 1 ஆம் திகதி வரையிலும், தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்." – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# பா.ஜ.கவை தலிபான் அமைப்புடன் ஒப்பீடு: மாயாவதி மருமகன் மீது வழக்குப் பதிவு

பா.ஜ.கவையும், தலிபான்களையும் ஒப்பிட்டு சர்ச்சையான வகையில் பேசினார் என பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதியின் மருமகன் ஆகாஷ் ஆனந்த் மீது உத்தர பிரதேசம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

உத்தர பிரதேச மாநிலம் சீதாபூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பேரணியில் கலந்து கொண்டு பேசிய பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதியின் மருமகன் ஆகாஷ் ஆனந்த், "இது துரோகிகளின் அரசாங்கம். அவர்களின் கட்சி இளைஞர்களை பட்டினி போடுகிறது. பெரியவர்களை அடிமைப்படுத்துகிறது. இது புல்டோசர் அரசாங்கம் அல்ல. பயங்கரவாதிகளின் அரசாங்கம். இது போன்ற ஒரு அரசைத் தான் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்திக் கொண்டிருக்கின்றனர்" என்று கூறினார்.

மேலும் பேசிய அவர், "மாநிலத்தில் 16 ஆயிரம் ஆட்கடத்தல்கள் நடந்துள்ளன என தேசிய குற்றப்பதிவு பணியகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாத, குழந்தைகளுக்கு உணவு கொடுக்க முடியாத அரசுக்கு இது வெட்கேடு" என்றார்.

தனது பேச்சின் இடையே பா.ஜ.கவை திருடர்களின் கட்சி என்றும், பணக்காரர்களிடம் இருந்து அக்கட்சி 16 ஆயிரம் கோடி ரூபாய் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டார். ஆகாஷ் ஆனந்தின் இந்த பேச்சு பா.ஜ.கவினரிடையே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு கண்டனம் தெரிவித்துள்ள பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் ராகேஷ் திரிபாதி,

"ஆகாஷ் ஆனந்த் பகுஜன் சமாஜ் கட்சியில் வாரிசு அரசியலின் புதிய செடியாக முளைத்துள்ளார். எனவே அவர் ஊடகங்களில் தலைப்புச் செய்தியில் இடம்பெறுவதற்காக வேண்டுமென்றே தொடர்ந்து இது போன்று பேசி வருகிறார். இதற்கு மக்களும், தேர்தல் ஆணையமும் தக்க பாடம் புகட்டுவார்கள்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், பா.ஜ.க. இந்த சர்ச்சைக்குரிய வகையில் பேசினர் என்று ஆகாஷ் ஆனந்த் உள்ளிட்ட ஐந்து பேர் மீது உத்தர பிரதேசம் பொலிஸார் ஐந்து பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# கம்போடியாவில் வெடிமருந்து தளத்தில் பாரிய வெடிப்பு சம்பவம்; பலர் உயிரிழப்பு





தென்மேற்கு கம்போடியாவில் வெடிமருந்து தளம் வெடித்துள்ளதில் 20 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர் என அந்த நாட்டு பிரதமர் ஹன் மானெ ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த வெடிப்புச் சம்பவம் தொடர்பில் முழுமையான தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

இந்த வெடிப்பு சம்பவத்தின்போது நான்கு கட்டடங்கள் மற்றும் பல இராணுவ வாகனங்கள் சேதமடைந்துள்ளதோடு கிராம மக்களின் 25 வீடுகளும் சேதமடைந்துள்ளன என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளைப் போலவே கம்போடியா வெப்ப அலையால் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் வெப்பநிலையா இந்த வெடிப்புக்கு காரணம் என்பது தெரியவரவில்லை.

மேலும், மதியம் 2:30 மணியளவில் ஒரு பெரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது. பின்னர் அதைத் தொடர்ந்து சிறிய குண்டு வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் தகவல்கள் கூறுகின்றன.

# டுபாயில் அமைக்கப்படவுள்ள மிகப்பெரிய விமான நிலையம்





உலகிலேயே மிகப்பெரிய விமான நிலையம் டுபாயில் அமைக்கப்படவுள்ளதாக அந்த நாட்ட ஆட்சியாளர் ஷேக் முகமது தெரிவித்துள்ளார்.

டுபாயில் தற்போது உள்ள சர்வதேச விமான நிலையத்தை மறுசீரமைக்கும் நடவடிக்கைகான புதிய திட்டத்துக்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, விமான நிலையத்தில் புதிய முனையமொன்று அமைக்கப்படுமெனவும் ஷேக் முகமது தனது உத்தியோகப்பூர்வ எக்ஸ் தளத்தில் கூறியுள்ளார்.

அந்த பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தற்போது டுபாயில் உள்ள விமான நிலையத்ததை விட புதிதாக உலகின் மிக பெரிய விமான நிலையம் அமைக்கப்பட உள்ளது.

35 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பில் இந்த விமான நிலையம் கட்டப்பட உள்ளது. புதிய விமான நிலையம் தற்போது உள்ள சர்வதேச விமான நிலையத்தை விட 5 மடங்கு பெரியதாக இருக்கும்.

இந்த விமான நிலையத்தில் 400 வாயில்கள் மற்றும் 5 ஓடுபாதைகளும் அமைய உள்ளது. சுமார் 260 மில்லியன் பயணிகளை உள்ளடக்கும் வகையில் உலகின் மிகப்பெரிய திறன் கொண்ட விமான நிலையமாக இது இருக்கும்.

டுபாய் விமான போக்குவரத்து துறை, முதன் முறையாக இந்த விமான நிலையத்தில் புதிய விமான தொழில்நுட்பங்களை காண உள்ளது.

மேலும், விமான நிலையத்தை சுற்றி ஒரு முழு நகரம் கட்டப்படும். இந்த புதிய விமான நிலையம் அல்மக்தூம் சர்வதேச விமான நிலையம் என்று அழைக்கப்படும்" என தெரிவித்துள்ளார்.

# அழகிப்போட்டியில் வென்றார் 60 வயதான மரிசா ரோட்ரிக்ஸ்



ஆர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸ் மாகாணத்தில் இந்த ஆண்டு நடந்த மிஸ் யுனிவர்ஸ் அழகிப் போட்டியில் 60 வயதான மரிசா ரோட்ரிக்ஸ் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.

முதன்முறையாக 60 வயது பெண் ஒருவர் பிரபஞ்ச அழகி பட்டத்தை வென்றார் என்ற வரலாற்றில் மரிசா இடம்பிடித்துள்ளார்.

புவெனஸ் அயர்ஸ் மாகாணத்தின் தலைநகரான லா பிளாட்டாவில் வசிப்பவர், மரிசா ஒரு பத்திரிகையாளர் மற்றும் தொழில் ரீதியாக வழக்கறிஞர்.

இந்த வெற்றியின் மூலம், அடுத்த மாதம் நடைபெறவுள்ள மிஸ் யுனிவர்ஸ் ஆர்ஜென்டினா போட்டியில் பியூனஸ் அயர்ஸ் மாகாணத்தை பிரதிநிதித்துவப் படுத்த மரிசா தகுதி பெற்றுள்ளார்.




# ஜனநாயகத் தமிழ்த் தேசியஜ் கூட்டணியின் அம்பாறை மாவட்டக்குழு அங்குரார்ப்பணம்

(பாறுக் ஷிஹான்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அம்பாறை மாவட்டக் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூட்டணியின் செயலாளர் நா.இரட்ணலிங்கம், தேசிய அமைப்பாளர் கோ.கருணாகரம் (ஜனா), துணைத் தேசிய அமைப்பாளர் இரா.துரைரெட்ணம், நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் க.சிவநேசன், கைலாஸ் மற்றும் கூட்டணியின் அம்பாறை மாவட்டக்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ஒவ்வொரு கட்சியிலும் இருந்து தலா மூன்று பிரதிநிதிகள் அடங்கலாக மாவட்டக்குழு உருவாக்கப்பட்டது. மாவட்டக் குழுவின் இணைப்பாளராக ஹென்றி மஹேந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.






# அச்சுவேலியில் சிறுமி மரணம்

(ந.லோகதயாளன்)

காய்ச்சல் மற்றும் சத்தி காரணமாக சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்குக் கூட்டிச் செல்லப்பட்ட சிறுமி போகும் வழியிலேயே உயிரிழந்த அவலம் அச்சுவேலியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் – ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் சஸ்மிதா என்ற 5 வயதுச் சிறுமியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

சில தினங்களுக்கு முன்னர் உடல் இயலாமை (காய்ச்சல் காரணமாக) இந்தச் சிறுமிக்கு அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இருப்பினும் நேற்றைய தினம் சிறுமியின் உடல் நிலை மோசமாகவே, பெற்றோர் சிறுமியை அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு மீண்டும் கொண்டு சென்றபோதே சிறுமி வழியில் உயிரிழந்தார்.



உயிரிழந்த சிறுமியின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், பிரேத பரிசோதனைக்காக சடலம் இன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

பிரேத பரிசோதனைக்குப் பின்னரே உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கடற்படையின் விசேட சுற்றிவளைப்பில் உள்நாட்டு மீனவர்கள் பத்துப் பேர் கைது

திருகோணமலை – புடவைக்கட்டுப் பகுதிக்கு அப்பாற்பட்ட கடற்பகுதியிலும் மன்னார் – சிலாவத்துறை கடற்பிராந்தியத்திலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 10 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரு தினங்கள் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாக வெடிபொருள்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி கடற்படையினர் முன்னெடுத்த ரோந்து நடவடிக்கையில் திருகோணமலை புடவைக் கட்டு பகுதியில் படகொன்றுடன் 5 உள்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து மீன்பிடிக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, மன்னார் சிலாவத் துறை கடற்பிராந்தியத்தில் நேற்று முன்தினம் கடற்படையினர் முன்னெடுத்த ரோந்து நடவடிக்கையில் 5 மீனவர்கள் படகொன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் 10 பேரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அந்தந்த மாவட்டங்களிலுள்ள கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.





# ஜெர்மனி, அமெரிக்க ஆய்வுக் கப்பல்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விளக்கம்

அமெரிக்காவின் ஆய்வுக் கப்பல் இலங்கையின் கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் ஆய்வுக் கப்பல்களை அனுமதிப்பதில்லை என்ற அரசாங்கத்தின் கொள்கை ரீதியிலான தீர்மானத்திற்கு அமைய பாதுகாப்பு அமைச்சு இந்த முடிவை மேற்கொண்டுள்ளது.

எனினும், எரிபொருள் மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக அந்த கப்பல் நாட்டின் கடற்பரப்பிற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி இலங்கையை வந்தடைந்த மேற்படி கப்பல் 22 ஆம் திகதி புறப்பட்டுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சீனாவின் எதிர்ப்பை

ආරක්ෂක අමාත්‍යාංශය
பாதுகாப்பு அமைச்சு
Ministry of Defence

மீறி ஜெர்மனி ஆய்வுக் கப்பல் இரண்டாவது தடவையாகக் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதிக்கப்பட்டுள்ளதாக வார இறுதிப் பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த கப்பலுக்கு கடந்த மார்ச் மாதத்தில் முதலில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி மீண்டும் அந்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

கப்பல் பணியாளர்களை மாற்றம் செய்யவும் எரிபொருள் உள்ளிட்ட சேவை வசதிகளைப் பெறவும் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் தமது நாட்டிற்கு சொந்தமான கப்பலுக்கு கொழும்பு துறைமுகத்திற்குள் அனுமதி வழங்கப்படாத நிலையில் சீனா எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

ஜனாதிபதியின் தீர்மானத்தின் பிரகாரம் வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்குள் நுழைவதற்கு ஒரு வருட காலத்திற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் பாதுகாப்பு காரணங்களை முன்னிறுத்தி கவனம் செலுத்துவதே இதற்குக் காரணமாகும்.

2023 ஆம் ஆண்டு முதல் 14 மாதங்களுக்குள் 2 சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்பிற்கு வருகை தந்தமையினாலேயே இரு நாடுகளும் இது தொடர்பிலான கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தன.

# அரங்க சமூக அரசியல் செயற்பாட்டாளர் பாலா மாஸ்டரின் 2 ஆம் ஆண்டு நினைவு




அரங்க சமூக அரசியல் செயற்பாட்டாளரும் கிராமிய உழைப்பாளர் சங்க நிறுவுனர்களில் ஒருவருமான சரவணை பாலசிங்கம் (பாலா மாஸ்டர்) அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு அரங்கம் நேற்று முன்தினம் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் கலாநிதி சிறிகணேசன், ரொசாங்கன், அ. நாகரத்தினம் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினார்கள்.

மேலும் "ஒடுக்கப்பட்டோரின் ஆயுதமாக அரங்கு" என்ற தலைப்பில் கலாநிதி தே.தேவானந்த் உரை நிகழ்த்தினார். "கிராமிய கலைகளின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் புதுவை அன்பின் உரையாற்றினார். தோழர் சுகி "பாலா அவர்களின் அரசியல் பணிகள்" என்ற தலைப்பில் உரையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து தேவை, சத்திரிய தர்மம் நாடகங்களும் மேடையேற்றப்பட்டன.

# முள்ளிப் பகுதியில் மாடுகளைக் களவாக கடத்திச் சென்ற பொலிஸ் அலுவலர் கைது

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் முள்ளிப் பகுதியில் மாடுகளைக் களவாகக் கடத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் காங்கேசன் துறைப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே 3 மாடுகளைக் கன்ரர் ரக வாகனம் ஒன்றில் கடத்திச் சென்ற சமயம் நேற்று விசேட அதிரடிப் படையினரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் சான்றுப் பொருளகளுடன் சட்ட நடவடிக்கைக்காக விசேட அதிரடிப் படையினரால் நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.



# வாகன இறக்குமதி குறித்து நிதி அமைச்சு அறிவித்தல்

இந்த வருடத்தின் இறுதியில் அல்லது அடுத்த வருடத்தின் முற்பகுதியிலிருந்து மீண்டும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுக்களின் பரிந்துரைகளும் கவனத்தில் கொள்ளப்படும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

# ஊழியர் சேமலாப நிதிய வட்டி 13 சதவீதமாக உயர்த்த முடிவு

ஊழியர் சேமலாப நிதியத்திற்காக வழங்கப்படும் வட்டி விகிதத்தை 9 சதவீதத்தில் இருந்து 13 சதவீதமாக உயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஊழியர் சேமலாப நிதியம் நம் நாட்டில் மிகப்பெரிய நிதியமாகும், 27 லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். 2023 ஆம் ஆண்டுக்காக ஊழியர் சேமலாப நிதியம் ஊடாக முதலீடு செய்து ஈட்டிய பணத்தில் 9 சதவீதத்திற்கு பதிலாக 13 சதவீதத்தை வட்டியாக செலுத்தத் தயாராக உள்ளோம்.

குறைந்தபட்ச தொகையாக 9 சதவீத வட்டியை வழங்க முடியுமாக இருந்தது. ஆனால் அரசாங்கம் 13 சதவீதத்தை செலுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இது அரசாங்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும், அதன் உறுப்பினர்களுக்கும் இது வெற்றியாகும்.

இந்த நிதியை முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் லாபத்தின் நியாயமான பகுதி உறுப்பினர்களுக்கு செல்கிறது.” – என்றார்.

# பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் இன்று நாடளாவிய ரீதியில் சுகவீன லீவில்

**(அப்துல்சலாம் யாசீம்)**

நாடளாவிய ரீதியில் இன்று சுகயீன விடுமுறைப் போராட்டத்தை மேற்கொள்ள பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தீர்மானித்துள்ளது. நான்கு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடைய நிர்வாகச் செலவில் மூன்றில் ஒரு பகுதி அதிகரிக்கப்பட வேண்டும், அவர்களுக்கு நிரந்தர போக்குவரத்து கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்,

அலுவலக கொடுப்பனவுகள் 3000 ரூபாவாக வழங்கப்பட வேண்டும், நிரந்தர அலுவலக உபகரணங்கள், அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலகங்களில் பணியாற்றும் 320 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன்று விடுமுறை எடுக்க உள்ளனர் என திருகோணமலை மாவட்டபொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் பரமேஸ்வரன் லோஜினி தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.04.2024




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் மன ஆறுதலும் வெற்றியும் கிட்டும். இன்று வெற்றி காண யோசித்து செயற்பட வேண்டும்.

பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியில் கவனம் செலுத்த உங்கள் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும். உங்கள் துணையுடன் அன்பாக நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். இன்று அதிக பண வரவிற்கான சாதகமான நாள் அல்ல.

அதிக உடல் உழைப்பு காரணமாக கால் வலி ஏற்பட லாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். இன்று மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பது சிறந்தது. தெளிவான மனதின் மூலம் இன்று உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் சில கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். சூழ்நிலையை திறமையாக கையாள அல்லது தவறு நேராமல் இருக்க நீங்கள் அமைதியாக செயல்பட வேண்டும்.

உங்களின் விறைப்பான தன்மை காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படலாம். உறவின் நல்லி னக்கத்தை பேண இத்தகைய உணர்வை தவிர்ப்பது நல்லது.

இன்று தேவையற்ற செலவுகளை சந்திக்க நேரலாம். இது உங்களுக்கு சிறிது வருத்தத்தை அளிக்கும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.




இன்று சமநிலை உணர்வு காணப்படும். உங்கள் நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பொதுவாக இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

நீங்கள் பணிகளை தரமாக முடித்து தருவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற் கொள்ளும் சுறுசுறுப்பு உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேச வாய்ப் புள்ளது. இது இருவருக்குமிடையே உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் நல்ல வாய்ப்பு உள்ளது. இன்று சிறிது பணமும் சேமிப்பீர் கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.




பிரார்த்தனை மற்றும் தொண்டு நட வடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் நன்மை பெறலாம். இதன் மூலம் தெளிவு கிடைக்கும். நம்பிக்கையான சிந்தனை உருவாகும்.

பணியில் உங்கள் நேர்மையான அணுகுமுறை சாதகமான பலன்களைத் தரும். பணி யில் உங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கப் பெற லாம்.

உங்கள் துணையுடனான உங்கள் அணுகு முறையில் நேர்மை காணப்படும். இது இருவருக்கு மிடையே நல்ல பிணைப்பை வளர்க்க உதவும்.

இன்று அதிர்ஷ்டகரமான நிதிநிலை காணப்படு கின்றது. உங்கள் சேமிப்பை இன்று அதிகரிக்க இய லும். இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.




இன்றைய செயல்களை பொறு மையுடனும் சமயோசித புத்தியுடனும் மேற்கொள்ள வேண்டும். எதிர்மறை எண்ணங்கள்உங்கள் மனதில் குழப்பம் உண்டாக்கும். அத்தகைய உணர்வுக்கு ஆளாவதைத் தவிருங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இன்றைய பணிகளை முடிக்க திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் உறவில் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் ஒத்துப் போக உண்மையான முயற்சி எடுக்கவும்.

இன்று பணம் சம்பாதிக்க குறைந்த வாய்ப்பே உள்ளது. பணம் சேமிப்பதும் கடினம். நிதி சம்பந்தமான விஷ யங்களில் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

சளி காரணமாக உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் ஆலோசனை யைப் பெறுங்கள்.

பணியிடத்தில் பதற்றம் காணப் படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்தால் நற்பலன் கிடைக்கும்.

உங்கள் உறவில் மனக் குழப்பம் பாதிப்பை ஏற்படுத் தும். உங்கள் கருத்துக்களை உங்கள் துணையிடம் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிக்க தேவையற்ற செலவு களை கண்காணியுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக உங்களுக்கு கால் வலி அல்லது முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உறுதி மற்றும் நம்பிக்கை உணர்வு மூலம் உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம்.

பணியிடத்தில் சிறப்பான வளர்ச்சி காணப்படுகின்றது. உங்கள் பணிகளை திறமையாக துல்லியமாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் கருத்துக்களை நட்பாக பகிர்ந்து கொள்ள வேண்டும். இதனால் உங்கள் உற வில் அன்பும் மகிழ்ச்சியும் பொங்கும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு காணப் படுகின்றது. அது உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய உதவும்.

இன்றைய நாளுக்கு தேவையான ஆற்றல் உங் களிடம் நிறைந்து காணப்படும்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் இன் றைய நாளை சிறந்ததாக்கலாம். அதன் மூலம் ஆறுதல் மற்றும் திருப்தி கிடைக் கும். இன்று நற்பயன் காண திட்ட மிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல் லுறவை பராமரிக்க இயலாது. விருப்பமில்லாத சூழ் நிலையை திறமையாகக் கையாள அமைதியாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பழகும்போது சில கட்டுப் பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அதிகம் பேசுவதை தவிர்க்க வேண்டும்.

எதிர்பாராத காரணங்களுக்காக அதிக செலவுகள் ஏற்படும். பண விஷயங்களை கண்காணியுங்கள்.

தோல் சம்பந்தமான பிரச்சினை உங்களை பாதிக் கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.04.2024




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். அனுசரணையான போக்கின் மூலம் நன்மை கிட்டும். தடைகள் காணப்பட்டாலும் திட்டமிட்டு செயல்பட்டால் அதனை சமாளிக்க முடியும்.

கவனக்குறைவின் காரணமாக பணியிடத்தில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உறவில் நிலவும் பிரச்சினைகள் காரணமாக உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் அமைதியாக அமர்ந்து கலந்து பேச வேண்டும்.

அதிகரிக்கும் செலவினங்களை எதிர்கொள்ள நேரும். பணத்தை கவனமாகவும் சாதுர்யமாகவும் கையாள வேண்டும்.

முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு செழிப்பான நாள். தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். உங்கள் வளர்ச்சிக்கு உதவும் தக்க முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிக வளர்ச்சி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு மற்றும் பாராட்டு கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சில மாற்றங்களும் சில பயணங்களும் காணப்படும். தொண்டு நடவடிக்கைகள் மூலம் மகிழ்ச்சி கிட்டும். சாதாரண செயல்களை ஆற்றுவதில் கூட தாமதங்கள் காணப்படும்.

பணியிடத்தில் சில சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். எனவே உங்கள் பணிகளை திட்டமிட்டு திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினை காணப்படும். அமைதியாக அதனை தீர்க்க வேண்டும்.

நிதிநிலைமையில் குறைந்த வளர்ச்சி காணப்படும். இன்று பணத்தை தக்க வைத்துக் கொள்வது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஓய்வுக்கு நேரம் ஒதுக்குங்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். திறமையாக திட்டமிட்டால் வெற்றி காணலாம். உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் பணிகளை விரைவாக முடிக்க நேரலாம். உங்கள் பணிகளை எளிதாகக் கையாள உங்கள் நம்பிக்கை அணுகுமுறை உதவும்.

தம்பதியரிடையே பரஸ்பர மரியாதை நல்ல காணப்படும். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்களின் பணம் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். ஸ்திரமான நிதிநிலைமைக்கான வாய்ப்பு உள்ளது.

நம்பிக்கையான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park




# கத்தார் வாழ் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டி

(நூருல் ஹுதா உமர்)

Addon It நிறுவனத்தின் பிரதான அனுசரணையில் கத்தார் வாழ் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து ஸோன் கத்தார் ஏற்பாடு செய்த கரப்பந்தாட்ட போட்டி, கடந்த 26ஆம் திகதி டோஹா கேம்பிரிட்ஜ் பாடசாலையில் நடைபெற்றது.

இந்தப் போட்டித் தொடர் 10 அணிகளாகப் பிரிக்கப்பட்டு நடத்தபட்டது.

இதன் இறுதியாட்டத்தில் Z-12 அணியை வீழ்த்தி Z Force அணி சம்பியன் பட்டத்தைத் தமதாக்கியது.





இந்நிகழ்வின் அதிதிகளாக AddonIT நிறுவனத்தின் தலைவர்களான ஷாஹித் சராபத், இம்ரான் காசிம், ஸ்கை தமிழ் ஊடகத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான ஜே.எம் பாஸித் மற்றும் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் முஹம்மட் ஷரஃப் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.





